மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய மருத்துவ மனைக்குப் போய் இருப்பதாகச் சொன்னார்கள். திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்த மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

பேரவை அனுமதியுடன் ஒற்றிவைப்புத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

(iii) சென்னை நகரில் டாக்டர்கள் வேலை நிறுத்தம்

நண்பகல் 12-00

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி விவாதிக்கச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன் :—

"சென்னை நகரில் மாணவர் விடுதிகள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி, மாணவர்களுக்குப் பாதுகாப்புக் கோரி டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பது."

டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்திருப்பதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் இப்போதுதான் அவர்களுடன் விவாதம் நடத்தப் போயிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. நான் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் மாணவர்களைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நேற்று இரவு நான் இரண்டொரு கல்லூரி விடுதிகளுக்குப் போய் இருந்தேன். அங்கே மாணவர்கள் மிகவும் பயந்து, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள கையில் தடிகளை வைத்துக்கொண்டு இரவு பூராவும் தூங்காமல் இருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக வெங்கடேசுவரா ஹாஸ்டலில் சர்க்காருக்கு எதிரான போஸ்டர்களை அவர்கள் ஒட்டியிருப்பதாகவும், அதை பக்கத்தில் உள்ள பொதுமக்கள் கண்டிப்பதால் அதை எடுத்துவிடவேண்டுமென்றும், இல்லையென்றால் பாதுகாப்பு கொடுக்க முடியாது என்றும் போலீசார் சொன்னதாகச் சொல்கிறார்கள். இருந்தும் போஸ்டர்களை வைத்திருக்கிறார்கள். அது எப்படி இருந்த போதிலும் நான் இரண்டு பிரச்சினைகளைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஒன்று, மாணவர்கள் மனதில் ஏற்பட்டிருக்கிற பயத்தைத் தீர்த்தாக வேண்டும். அது எப்படி உருவாகியிருக்கிறது, யாரால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது அல்ல இப்போதுள்ள பிரச்சினை. அவர்கள் மனதில் ஏற்பட்டிருக்கிற பயத்தைத் தீர்த்தாக வேண்டும்.

இரண்டாவதாக 25-ஆம் தேதியிலிருந்து 30-ஆம் தேதிவரை 6 நாட்கள் ஆகிவிட்டன. சகஜ நிலைமை வருவதற்கு இன்னும் பதினைந்து நாட்களாவது ஆகக்கூடும் என்று கருதுகிறேன். இந்த நிலையில் மாணவர்களால் எப்படிப் படிக்க முடியும், எப்படிப் பரிட்சை எழுதப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஏப்ரல் 25-ம் தேதி முதல் 30-ம் தேதிக்குள் சர்வகலாசாலைப் பரிட்சைகள்

1968 மார்ச் 30] [திரு. க. ர. நல்லசிவன்]

நடைபெற இருக்கின்றன என்று நினைக்கிறேன். இப்போது வீணாகி விட்ட 15 நாட்களை எப்படி ஈடு செய்ய முடியும் என்று தெரிய வில்லை. ஆகவே இந்த அரசாங்கமானது பரிட்சை ஆரம்பிக்க இருக்கிற தேதியில் இருந்து ஒரு 15 நாட்கள் ஒத்திவைத்து பரிட்சையைத் தொடங்க ஏற்பாடு செய்தால் அது மாணவர் களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதுபற்றி விவாதிக்க இந்த அவை நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல மாணவர்களின் மனதில் ஏற்பட் டிருக்கிற பயத்தைப் போக்க எந்த எந்த வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ அந்த அந்த வகையில் பாது காப்பு அளிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இப்போது இருக்கிற சூழ்நிலை கெடாமல், அமைதியும், ஒழுங்கும் பாதுகாக்கப் படும். பலவிடங்களில் அமைச்சரவையையும், அரசையும் கேவலப்படுத்துகின்ற வகையில் எழுதி வைத்திருக்கிறார்கள் என்றாலும், இரண்டு சாராருக்கும் மோதல் ஏற்படாத அளவுக்குக் காவல் துறையினர் அங்கங்கே பாதுகாப்பாக இருக்கிறார்கள். மாணவர்கள் பஸ்ஸைப் பிடித்து வைத்துக் கொண்டபோதும்கூட, அவர்கள் விருப்பப்படியே, அன்று பூராவும் இருக்கவிட்டு, சமாதானமான முறையில், மறுநாள்தான் எடுத்து வந்திருக் கிறார்கள். அவர்கள் விருப்பத்திற்கிணங்க இரவு முழுவதும் போலீஸ் துறையினர் பாதுகாப்பாக காவல் புரிந்து வருகிறார்கள். அவர்களுடைய பயம் அகற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பரிட்சையை ஒத்திவைப்பது பற்றி பல்கலைக்கழகம்தான் முடிவு செய்ய வேண்டும். இன்று கல்லூரி முதல்வர்களை எல்லாம் அழைத்துப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேச இருக்கிறார். அவர்களுடன் கலந்தாலோசித்து முடிவு இன்று மாலையில் அறிவிக்கப்படலாம். எப்படி இருந்தாலும் அதுபற்றி அவர்கள் தான் முடிவு செய்யவேண்டுமே தவிர, இந்த அவையை ஒத்தி வைத்து நாம் விவாதிப்பதற்கு ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சுப்பையா, திரு. க. ர. நல்லசிவன், திரு. செ. பாலசுப்பிரமணியன் ஆகியோர் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

(iv) நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் மிளகாய் வற்றலுக்கும், பருத்திக்கும் நியாயமான அடிப்படை விலையை நிர்ணயித்தல்

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை யின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும் பொது